**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் O.S.No.24/2016 P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.V.பிரதாப், என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | லோகநாதன் | தொழில் |
| த.பெ. | | மதம் |
| கிராமம் | | சாதி |
| வயது | | வட்டம் |

**முதல் விசாரணை - 03.09.2024**

நான் இந்த வழக்கில் 2ம் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 16 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை வாதிகள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. வா.சா.ஆ.1 - 29.06.1978 தேதியிட்ட முத்துக்குமாரசாமி மற்றவர்கள் கோபாலகிருஷ்ணனுக்கு எழுதிக்கொடுத்த அசல் கிரய பத்திரம்.

2. வா.சா.ஆ.2 - 14.04.1980 தேதியிட்ட கோபாலகிருஷ்ணன் ஜெயபாலுக்கு எழுதிக் கொடுத்த அசல் செட்டில்மெண்ட் பத்திரம்.

3. வா.சா.ஆ.3 - 04.12.2002 தேதியிட்ட ஜெயகோபால் அச்சுதரெட்டியாருக்கு எழுதிக் கொடுத்த அசல் செட்டில்மெண்ட் பத்திரம்.

4. வா.சா.ஆ.4 - 14.03.2011 தேதியிட்ட அச்சுத ரெட்டியார் 2வது வாதிக்கு எழுதிக் கொடுத்த அசல் செட்டில்மெண்ட் பத்திரம்.

5. வா.சா.ஆ.5 - 29.09.2014 தேதியிட்ட சென்னை மாநகராட்சி வழங்கி அச்சுத ரெட்டியாரின் அசல் இறப்பு சான்றிதழ்.

6. வா.சா.ஆ.6 - திருவண்ணாமலை மாவட்ட வருவாய்துறை அலுவலர் அச்சுத ரெட்டியாருக்கு வழங்கிய அசல் பட்டா.

7. வா.சா.ஆ.7 - 13.01.2016 தேதியிட்ட ஆலந்தூர் துணை வட்டாட்சியர் 2வது வாதிக்கு வழங்கிய அசல் பட்டா.

8. வா.சா.ஆ.8 - 21.08.2011 தேதியிட்ட 2வது வாதி சென்னை பல்லாவரம், செயிண்ட் தாமஸ் மவுண்ட் எக்சிகியூடிவ் ஆபிசரிடம் சொத்து வரி, குடிநீர் வரி பெயர் மாற்றம் செய்யக்கோரி எடுத்த நடவடிக்கைகளின் நகல்.

9. வா.சா.ஆ.9 - தமிழ்நாடு மின் வாரியத்தில் பெயர் மாற்றம் செய்ய 2வது வாதி கட்டிய கட்டண ரசீது.

10. வா.சா.ஆ.10 (4 எண்ணிக்கை) - 2வது வாதி மின் கட்டணம் செலுத்தியதற்கான மின் கட்டண ரசீதுகள்.

11. வா.சா.ஆ.11 - 02.08.2012 தேதியிட்ட அச்சுத ரெட்டியார் மற்றும் மகாலட்சுமி ஆகியோர் முதல் பிரதரிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல்.

12. வா.சா.ஆ.12 - ஒப்புகை அட்டை.

13. வா.சா.ஆ.13 - 07.1.2016 தேதியிட்ட வாதிகள், முதல் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல்.

14. வா.சா.ஆ.14 - 13.01.2016 தேதியிட்ட இந்திய அஞ்சலக துறையால் பிரதிவாதிகள் 2, 3, 5 முதல் 8 ஆகியோர்கள் அறிவிப்பை பெற்றுக் கொண்டனர் என காட்டும் Downloaded Postal Track Consignment.

15. வா.சா.ஆ.15 - தாவா சொத்து குறித்த வரைபடம்.

16. வா.சா.ஆ.16 - 04.12.2002 தேதியிட்ட 3வது பிரதிவாதி ஜெயகோபால் அச்சுத ரெட்டியாருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் குறித்து எழுதிக் கொடுத்த அசல் கடிதம்.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)